# 'மூன்றாம் உலகப்போர்' புதினம் கூறும் கிராமப் புற சுற்றுச் சூழல்

மு. சுரேஷ் குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை-15
msureshkumar2000@gmail.com

7

**ஆய்வுச் சுருக்கம்:**

இந்த பூமியில் வாழும் ஆறறிவு கொண்ட மனிதர்கள் முதல் ஐந்தறிவு கொண்ட விலங்குகள் வரை உயிர் வாழத் தேவையான ஒன்று சுற்றுப்புற சுகாதாரம் ஆகும். சுகாதாரம் என்பது சுற்றுச்சூழலைப் பொருத்தே அமையும். சுற்று ச் சுழல் சுகாதாரம் என்பது நகர்ப்புறங்கள் மட்டுமன்றி கிராமப்புறங்களிலும் இன்றியமையாத ஒரு தேவையாகும். அத்தகைய கிராமப்புற சுற்றுச்சூழல் பற்றி ஒரு சிறப்பான விழிப்புணர்வு புதினமாக 'கவிஞர் வைரமுத்து எழுதிய 'மூன்றாம் உலகப்போர் ' விளங்குகிறது. கருத்தமாயி எனும் விவசாயியை மையமாகக் கொண்டு இப்புதினம் கிராமத்தையும் அதன் சுற்றுச்சூழல் சிக்கல்களை மையமாக வைத்து எழுதப்பட்ட ஓர் புதினமாகும். விவசாய நிலங்களை ஒரு தனியார் மில் முதலாளி கிராம ஊர் மக்களிடம் அவர்களின் வறுமையைப் பயன்படுத்தி சூழ்ச்சி செய்து அவர்களது விவசாய நிலங்களை அபகரிக்க முயற்சி செய்கிறான். அத்தகைய சூழ்ச்சிக்கு விவசாயி கருத்தமாயி அவர்களின் மூத்த மகன் முத்துமணி துணைப் போவதும் , இளைய மகன் எதிர்ப்பதும் கதைக் கருவாக கொண்டு தொடர்கிறது இப்புதினம். இப்புதினத்தை வாசித்தப் பின்னர் விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றியும் விவசாயியின் இன்னல்கள் பற்றியும் இப்புதினம் வாசித்த ஒவ்வொரு வாசகரும் நன்றாக உணரமுடியும்.

**முன்னுரை:**

இயற்கைச் சார்ந்த சூழலையும் அதன் பயன்பா டுளையும் மிகுதியாகவே பேசும் தமிழ் இலக்கியங்கள், அவ்வியற்கையில் ஏற்பட்ட சீரழிவுகள் , சிக்கல்கள் குறித்தும் பேசியுள்ளன. அது மட்டுமின்றி தற்கால மனித வாழ்வியலை மிக விரிவாகவே பேசும் புதின இலக்கியங்கள் - தமிழகத்தில் நிலவுகின்ற சுற்றுச்சூழல் பிரச்சனைகளை, சிறப்பாக பதிவு செய்வது மட்டுமல்லாமல் அவற்றிற்கு ஒரு தீர்வாகவும் அமைகின்றன. அவ்வாறு தமிழ் புதினங்களில் கிராமப்புற சுற்றுச்சூழலை மையப்படுத்தி எழுதப்பட்ட ஒரு புதினம் 'வைரமுத்துவின் 'மூன்றாம் உலகப்போர்! எனும் புதினமாகும். இப்புதினத்தில் கூறியுள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகளையும் அவற்றின் தீர்வுகளையும் ஆசிரியர் எவ்வாறு கூறியுள்ளார் என்பதை நாம் கீழ்வரும் ஆய்வுக் கட்டுரையில் காண்போம்.

**கிராமப்புறமும் அதன் சுற்றுச் சூழலும்:**

நம் தமிழ் இலக்கியத்தில் புதினம் என்பது ஒரு நெடுங்கதையாகக் கொண்டு எழுதப்படுவதாகும். பல்வேறு தலைப்புகளில் நாட்டின் பல்வேறு சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து பல புதினங்கள் இயற்றப்பட்டாலும் , தற்போதுள்ள சூழ்நிலையில் சுற்றுச்சூழல் தொடர்பான தமிழ்ப் புதினங்கள் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக சுற்றுச்சுழல் ஆய்வாளர்களால் மட்டுமல்லாமல், வாசகர்களாலும் பார்க்கமுடிகிறது. அவ்வகையில் 1972-ம் ஆண்டு 'Murugar – The – Tille' எனும் பெயரில் 'A Noval of Indian Rural Life' என்ற குறிப்புடன் ஆங்கிலப் பதிப்பாக வெளிவந்துள்ளதை நாம் அறியலாம்.

மேலும் இந்நாவல் கிராமப்புறச் சூழலை மையமாக கொண்டு விளங்கியுள்ளது.

கிராமப்புறங்களை விட்டுவிட்டு பணி நிமித்தமாக நகரத்தை நோககிப் படையெடுப்பதை நிறுத்த வேண்டும் என்று இப்புதினம் வலியுறுத்துகிறது. இவ்வாறு கவிஞர் வைரமுத்து எழுதிய 'மூன்றாம் உலகப்போர்' கிராம்புற சுற்றுச்சூழல் பாதிப்புகளையும் அதன் தீர்வுகளையும் எடுத்துரைக்கும் ஒரு சுற்றுச்சூழல் புதினமாகும்.

**"இப்போது கூட ஒரு போர் நடக்கிறது. ஆனால் இந்த போர் நேருக்கு நேர் இல்லை. இந்த போர் மறைந்திருக்கும் ஆயுதங்களுடன் நடத்தப்படுகிறது. இது வானத்திற்கும்பூமிக்கும் இடையிலான போர். இது மக்களுக்கும் இயற்கைக்கும் எதிரான போர். இது புவி வெப்பமயமாதல் மற்றும் உலகமயமாக்கல் வேளாண்மைக்கு எதிராக நடத்தப்பட்ட போர்"**

- **கவிஞர் வைரமுத்து**

மூன்றாம் உலகப்போர் என்பது ஆயுதம் தாங்கிய போர் அற்றது எனவும் இது மனிதனுக்கும் இயற்கைக்கும் உண்டான போர் என்றும் பார்க்கப்படுவதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு விவசாய நிலத்தை அழித்துவிட்டு பெரிய ஆலைகள் மற்றும் சாயக்கழிவு பட்டறைப் போன்றவற்றை அமைப்பதனால் கிராமப்புறங்களில் உள்ள இயற்கையான சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு விவசாயம் அழிந்து விடும் மற்றும் நிலத்தடி நீர் மாசாகி விடும் என்று இப்புதினத்தின் வாயிலாக ஆசிரியர் விளக்குகிறார்.

மேலும் நாம் தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்த மண்ணை விற்று விட்டு கிராம மக்கள் நகரத்தை நோக்கிக் குடியேறுவதால் வருங்காலங்களில் கிராமங்கள் அழிந்துவிடும் என்று இப்புதினத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

கிராமங்கள் தான் நாட்டின் முதுகெலும்பு என்கின்ற காந்தியடிகளின் கூற்றிற்கேற்ப கிராமப்புறச் சுற்றுச்சூழல் செழிப்படைய முதலில் கிராமங்களில் விவசாயத்தை போற்றி வளர்க்க வேண்டும். விளை நிலங்களை கட்டடங்களாக மாற்றக் கூடாது. கிராமங்களில் வேளாண் சார்ந்த தொழில்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும் வேளாண்மையை பாதிக்கும் எந்தவொருத் தொழிலையும் அனுமதிக்கக்கூடாது. படித்த இளைஞர்கள் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தனது கிராமங்களை விட்டு அதிக வருவாய் ஈட்டும் பொருட்டு நகரங்களுக்கு குடிபெயர்தலைத் தடுக்க வேண்டும். அவரவர் கிராமத்தில் வேளாண்மை சார்ந்த பாதுகாப்பை உறுதி செய்தல் அவசியமான ஒன்றாகும். கிராமங்கள் பற்றி பலவித கற்பனைகள் உண்டு. பொதுவாக அயல்நாட்டவர்களுக்கு கிராமங்கள் பற்றி பலவித கற்பனைகள் உண்டு. இங்கே தமது புதினத்தில் சுற்றுச்சூழல் கல்வி சார்ந்த ஒரு அயல் நாட்டுப்பெண் எமிலி மற்றும் ஜப்பான் நாட்டு இளைஞன் இஷி, மற்றும் விவசாயி கருத்தமாயி மகன் சின்னப்பாண்டி ஆகியோரது உரையாடலில்.

'**இப்படித்தான் இருக்குமா? இந்திய கிராமங்களெல்லாம்? என்றான் இஷி**

**'சில கிராமங்கள் இதைவிட அழகாக; பல கிராமங்கள் இதை விட மோசமாக்,**

என்றான் சின்னப்பாண்டி.

**மொத்தம் மூன்று இந்தியா என்றான் இஷிமுரா**

**'முதல் இந்தியா – அயல்நாட்டு வங்கிகளின் அந்தப்புரங்களில்**

**இரண்டாம் இந்தியா – வளர்ந்துவரும் நகர்ப்புறங்களில்**

**மூன்றாம் இந்தியா – வளராத கிராமப்புறங்களில்**

**இந்த மூன்றாம் இந்தியாதான் பொய்யில்லாத இந்தியர் புறக்கணிக்கபட்ட இந்தியர்'.**

**'வளமான பூமி; ஆனால் வறுமைப்பட்ட மக்கள்; என்றான் சின்னப்பாண்டி.**

**'மண்வளம் இயற்கை; வறுமை செயற்கை' என்றால் எமிலி.**

**‘என்ன செய்யவேண்டும்‘இஷி’ என்றான் சின்னப்பாண்டி:**

**‘அமைப்பைமாற்று’ புன்னகையோடு சொல்லிவிட்டு இறுக்கமானான் இஷி**

**மூன்றாம் உலகப் போர், ப.எண் – 208**

இப்படி இந்த உரையாடலில் கிராமங்களின் மற்றும் கிராமமக்களின் அவல நிலைப் பற்றி கூறும் சின்னப்பாண்டியிடம் இஷிமுராவும் , எமிலியும் இதை நீ மாற்ற வேண்டும் என்று அறிவுறுத்துகின்றனர்.

**“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**

**தொழுதுண்டு பின் – செல் பவர்”**

**திருக்குறள் – 1033, குடியியல்**

என்று உழவுத்தொழிலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் தனது குறளில் அழகாக எடுத்துரைத்திருக்கின்றார்.

**பொருள்:**

உழவு செய்து அதனால் கிடைத்ததைக் கொண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர், மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

- மு. வரதராசனார்.

இவ்வாறு வேளாண்மை சார்ந்த கிராமப்புற சுற்றுச்சூழலின் அவசியத்தை இப்புதினம் வாசகர்களுக்கு உணர்த்துகின்றது.

**இயற்கையும் சுற்றுச்சூழலும்**

இயற்கை என்பது இறைவன் அளித்த கொடை. ஆனால் அதை பாதுகாத்து அடுத்த தலைமுறைகளுக்கு விட்டு செல்வது என்பது மனிதர்களாகிய நமது கடமை என்று ஒவ்வொருவரும் உணர்ந்தால் மட்டுமே நாம் இயற்கையை பாதுகாக்க முடியும். பணத்துக்காக மனிதர்கள் இயற்கையை அழித்து விடுகிறார்கள். இங்கே நமது புதினத்தில் கருத்தமாயியின் மூத்த மகன் முத்துமணி குறுக்கு வழியில் அரசுப் பணி வாங்கியது மட்டுமல்லாமல் அவன் செய்யும் வனச் சரகர் பணியின் மூலம் வனத்தைக் கொள்ளையடித்து , மரங்களை வெட்டி , இயற்கையை சீரழித்து விடுகிறான். இறுதியில் அவன் தன் தந்தையாலேயே வெட்டி வீழ்த்தப்பட்டதாக முடியும் இந்த கதை. இக்கதையிலிருந்து இயற்கைக்கு எதிரானவர்கள் பூமியில் வாழ தகுதியற்றவர்கள் என்று நம்மால் உணர முடிகிறது. இயற்கையின் சூழல் குறித்து ஆசிரியர் தன் புதினத்தின் வாயிலாக எடுத்துரைப்பது,

**“குளமும் பூமாதேவி மாதிரிதான். ஒரு பாகுபாடும் பாக்கிறதில்ல.**

**மனுசனா? மாடா? வா... வந்து குளிச்சுக்க**

**முள்ளுச் செடியா? அல்லிக் கொடியா? வா.. வந்து முளைச்சுக்க**

**மேல் சாதியா? கீழ்ச்சாதியா? வா.... வந்து குடிச்சுக்க**

**வயித்த வலிக்காரனா? வாந்தியெடுத்த ‘முண்டச்சியா’? வா... வந்து செத்துக்க**

**சக்கரை வியாதியா? சங்கு இலை இருக்கு தின்னுக்க**

**தடுமன் காய்ச்சலா? தாராக்கீரை இருக்கு உதக்கிக.”**

இப்படி சகல சீவராசிகளுக்கும் சர்வரோக நிவாரணியாயிருந்தது பாண்டியராசக்கயிரு வெட்டி வச்ச அந்த குளம்தான்.

குளம் நெறஞ்சாக் காடுகரை விளையரது மட்டுமல்ல , நிலத்தடி நீர் கசிஞ்சு கசிஞ்சு சாத்து பத்துல இருக்குற மலட்டுக் கெணறுகளுக்கும் மார்புல ஊத்தெடுக்க ஆரம்பிச்சிரும்.

**"குளங்கறது ஒரு ஊருக்குத் தளதளன்னு தளும்பி நிக்கிற சந்தோசம்"**

**மூன்றாம் உலகப்போர்**

**ப.எண் – 275**

இயற்கையைப் பற்றி கூறும் வள்ளுவர்,

**"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல். "**

**குறள் – 637**

**வனவிலங்குகளும் சுற்றுச்சூழலும்:**

சுற்றுச்சூழல் என்று கூறும்போது மிகுதியாகப் பாதிப்படைவது வனம் மற்றும் வனவிலங்குகள் ஆகும். வனங்களை மனிதர்கள் ஆக்கிரமிக்க தொடங்கி விட்டனர். மரங்களை வெட்டுதல் மற்றும் வனவிலங்குகளை வேட்டையாடுதல் போன்றவை வனவிலங்குகள் அழிவிற்கு வழி வகுக்கும். வனங்களில் மரங்களை வெட்டுவதாலும் , வனங்களை ஆக்கிரமிப்பதாலும் வனவிலங்குகள் மக்களை அச்சுறுத்துகின்றன. அவைகள் வாழும் காட்டில் மனிதர்கள் ஆக்கிரமிப்பு செய்தால் வனவிலங்குகள் நீர்நிலைகளைத் தேடி ஊருக்குள் ஊடுருவுகின்றன.

ஆகவே தவறுகள் எல்லாம் மனிதர்களாகிய நாம் செய்து விட்டு வனவிலங்குகள் மேல் பழி போடுவது எவ்வகையிலும் நியாயமாகாது. பண்டைய காலததில் வனத்தையும் வனவிலங்குகளையும் கடவுளாக வழிபட்டு வந்தனர். ஆனால் தற்போது வனவிலங்குகளை அழித்து விட்டு அவ்விடத்தில் கோயில் கட்டினால் இறைவனே அதை ஏற்க மாட்டார் என்பது சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கருத்தாகும்.

வனத்தின் முக்கியத்துவம் பற்றி வள்ளுவர்,

**'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடைய தரண்'** **குறள்- 742**

மணிபோல் தெளிந்த நீரும் , வெட்ட வெளியான நிகழும் , மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய இவை நான்கும் உள்ளதே அரண் ஆகும். – மு. வரதராசன்.

மூன்றாம் உலகப் போர் புதினத்தில் ஆசிரியர் கூறுவது,

**வனவளம் காப்போம்**
**வாழ்க்கையை மீட்போம்!'**

உலகம் வாழத் தேவையான உயிர்க்காற்றை பெறவும் , உயிர்ச்சூழலின் சமன்பாட்டை ஒழுங்கு செய்யவும், பல்லுயிர்ப் பெருக்கத்தின் பயன்பாடுகளுக்காகவும் நாம் வனப் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும். உலக நிலப்பரப்பில் முப்பத்து மூன்று விழுக்காடு பச்சை உடுத்திய வனக்காடாக மாற

வேண்டும். இது ஐ.நா. சபையின் வகைக் கோட்பாடு. என்று ஆசிரியர் தனது புதினத்தில் குறிப்பிடுகிறார்.

**சுற்றுச் சூழலில் பொதுமக்களின் பங்கு:**

சுற்றுச்சூழல் சீர்க்கேடு என்று நாம் மற்றவர்களையும் , அரசையும் குறை கூறுவதையே வழக்கமாக வைத்திருக்கின்றோமே தவிர நாம் சுற்றுப்புற சுகாதாரத்திற்காக என்ன செய்திருக்கிறோம் என்பதை உணர்ந்து செயல்பட்டால் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும். தற்போது தமிழக அரசு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக ஒரு மிகப்பெரிய முன்னெடுப்பாக குப்பையைத் தாம் பிரித்து கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றது. ஆனால் நாம் எத்தனை பேர் இதை முறையாக பின்பற்றுகிறோம் என்றால் அது மிகப்பெரிய கேள்விக்குறியேயாகும். மக்கும் குப்பை , மக்காத குப்பை என்று பொது மக்கள் தரம் பிரித்து குப்பையைக் கொடுத்தால் அதை மறுசுழற்சி செய்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆங்காங்கே உள்ள குப்பை மேடுகளை அகற்றி நமது சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்து நம்மையும் நமது கிராமத்தையும் சுற்றுச்சூழல் மிகுந்த கிராமமாக நம்மால் மாற்ற முயலும்.

இக்கருத்தையே ஆசிரியர் தனது புதினத்தில் கூறுவது,

**களத்துல வைராக்கியமா எறங்கிட்டான் சின்னப்பாண்டி. கூடப் படிச்ச பழைய பள்ளிக்கூடத்துப் பயலுகளையும் இளவட்டங்களையும் குப்பைமேட்டுல ஒண்ணு கூட்டிக் கூட்டம் போட்டுச் சொல்றான்:**

**"யப்பா...அப்பன் ஆத்தாளுக்குச் சேவகம் பண்ற மாதிரி சாமிக்குப் பூமால சாத்துற மாதிரி இப்ப நாம பண்ணப் போற வேல. இதுல கூலி கெடையாது ; கொடுப்பின மட்டும்தான். ஊருக்கு நல்லது பண்ற ஒரு சந்தோஷம் போதும்னு நெனைக்கிறவன் மட்டும் என்கூட வா. மத்தவன் போயிரு".**

**ஒரு நிமிசம் ஒரு பயலும் ஒண்ணும் பேசல.**

**"இது உங்க வீட்டு வேலயோ எங்க வீட்டு வேலயோ இல்ல.ஊரு வேல. செய்யிறோம் சின்னப்பாண்டி. நீ கெணத்துல விழுன்னா விழுகுறோம்." ஒரே ஒருத்தன் சத்தம் போட்டுச் சொல்லவும் "ஆகட்டும்"னு தலையாட்டுச்சு எளந்தாரிக்கூட்டம்.**

**ஆளுக்கு அம்பது ரூவா வரிபோட்டுக் குப்பைலாரியப் புடிச்சு நிறுத்திக்கிட்டுக் குப்பைமேட்டைக் கரைச்சுக் கரைச்சு வெட்டி எறியிறாங்க வெடலப் பயலுக. நாத்தம்னா நாத்தம் பொண நாத்தம். மூக்கை இறுக்கிப் பொத்திக்கிட்டுப் போகுது அந்தப் பக்கம் போற காத்து. இடுப்புத் துண்ட எடுத்து மூஞ்சியில கட்டச் சொன்னான் சின்னப்பாண்டி.**

**வெட்ட வெட்ட என்னன்னமோ வருது ஒரு சமூகமே கெடக்கு குப்பையில.**

**மக்கவே மக்காத பாலீத்தீன்பையிக - உடைஞ்ச பிளாஸ்டிக் குடங்க - மருந்துப் பாட்டிலுக - மாதவிலக்குத் துணிக - சீக்கு வந்து செத்த கோழிக - அங்கங்க ஆணுறைக - உரிச்ச கோழி இறகுக - செத்த நாயிக - மக்கிப்போன கூரைக் கிடுகுக - பொணஞ்சாத்திவச்ச தலகாணிக - துருப்பிடிச்ச தகரங்க - ஏகப்பட்ட எருப்புழுவுக செருப்புல அடிப்பட்டை இல்லாத வாருக - வாருக இல்லாத அடிப்பட்டைக- குறைமாசத்துல செத்துப் பெறந்த இல்ல... பெறந்து செத்த கன்னுக்குட்டிக - மூஞ்சி அழுகிப் போன பொணங்க மாதிரி அடையாளம் காண முடியாத பொருளுக!**

**வெட்டவெட்டத் தொலையாது வெக்காலிக் கட்டை'ன்னு பழமொழி இருக்கு ஊருல. அந்தக் கணக்குல அள்ள அள்ளக் குறையல அட்டணம்பட்டிக் குப்பை.**

**அள்ளியாச்சு குப்பைய. எங்கே கொட்டறது ? ஊருக்கு எதிர்க்க ஒன்றரை கிலோமீட்டர்ல**

**இருக்கு சாத்தாகோவில்பட்டி. அந்த ஊருமேட்டுல இருக்கு ஒரு பெருங்கெடங்கு. அதுதான் சகல குப்பைகளுக்கும் ஜமாபந்தி. அங்க போயி கொட்டிட்டாக குப்பைகளை. அஞ்சாறு 'நடை'யிலயே கரைஞ்சு காணாமப் போயிருச்சு குப்பைமேடு.**

**எச்சி இலை விழுந்த எடத்துல இப்ப இலை போட்டுச் சாப்புடலாம்... அப்படியிருக்கு. எல்லாரும் சந்தோஷப்பட்டு, சின்னப்பாண்டிக்குக் கைகொடுத்தாக, கட்டிப்புடிச்சாக, பொழுது சாயப் போயிட்டாக."**

இவ்வாறு நாம் நமது சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள நாமும் நம்மால் முடிந்த வேலையை செய்ய வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே நம்முடைய வீட்டை மட்டும் அல்லாமல் நமது நாட்டையும் சுத்தமாக வைத்திருக்க முடியும் என்பதே நம் அனைவரின் கருத்தாகும்.

**முடிவுரை:**

சுற்றுச்சூழல் என்பது கிராமத்தில் வாழ்பவர்கள் நகரங்களில் வாழ்பவர்கள் என்று இல்லாமல் இவ்வுலகில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் மிக முக்கிய உயிர்க்காரணியாகும். நமது சுற்றுச் சூழலைத் தூய்மையாக வைத்திருந்தால் மட்டுமே நமது சமுதாயத்தை எதிர் வரும் சந்ததிகளுக்கு பசுமையானதாக விளைவித்து கொடுக்க முடியும். புதினங்கள் வாசகர்களுக்கு வெறும் படைப்பாகவே இருந்து விடக் கூடாது. அதை தாண்டி மக்களுக்கு இயல்பான வாழ்வியல் சூழலை சமூகப் புரிதலோடு கொண்டு சேர்க்க வேண்டும். அவ்வாறு ஒரு கிராமத்தையும் விசவாயியையம் மையமாக வைத்து படைக்கப்பட்ட ஓர் இலக்கியம் இந்த மூன்றாம் உலகப் போர் என்பதில் ஐயமில்லை.

**தொகுப்புரை:**

1) சுற்றுப்புற சீர்கேடு என்பது ஒரு சமூக சீர்கேடு என்று நம்மால் உணர முடியும்.
2) சுற்றுப்புற சுகாதாரம் என்பது வளர்ந்த நகரங்கள் மட்டுமன்றி கிராமங்களிலும் ஒரு மிகப்பெரிய சவால்கள் எதிர்கொள்கின்ற சிக்கல்களாக அமைந்துள்ளது.
3) சுற்றுப்புற சுகாதாரத்திற்கு அரசு மட்டுமன்றி ஒவ்வொரு குடிமகனும் பொறுப்பாக செயல்பட்டு சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும்.
4) இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிப்பவர்கள் நாட்டில் வாழத் தகுதியற்றவர்கள் என்று புதினம் உணர்த்துகிறது
5) வனங்கள் அழிக்கப்படுவதாலே வனவிலங்குகள் காட்டை விட்டு ஊருக்குள் வந்து மக்களை அச்சுறுத்துகின்றன.

**துணை நூற்பட்டியல்**

1. மூன்றாம் உலகப் போர் - கவிஞர் வைரமுத்து – சூர்யா லிட்ரேச்சர் (பி)லிட். சென்னை

2. திருக்குறள் தெளிவுரை – மு. வரதராசனார் – பாரிநிலையம் சென்னை.